# முஸ்லிம் மெய்யியலில் ஒழுக்கவியல்

**றியால்.ஏ.எல்.எம் (1), நப்லா.கே.எல்.எப். (2)**

[1] சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

[2] துணை விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

naflikl1992@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கிரேக்கச் சிந்தனை வளர்ச்சியானது இஸ்லாமியக் கலாசாரத்திற்குள் ஊடுருவியபோது அதன்பாலான அறிவுப்போக்குகள் உருவாக்கம் பெற்றன. இஸ்லாமிய ஏகத்துவக் கோட்பாட்டின் மீதான நுண்ணாய்வுப் பரிசோதனைகளுக்கு அது வழிவகுத்தது. சமய ஆன்மீக விளக்கங்களைக் கொண்ட இறையியல் வாதமானது மெய்யியல் ஆய்வுக்கும் பகுத்தறிவு நோக்கிற்கும் உள்ளானதாகும். இதன் அடிப்படையில் கிரேக்கத்தை ஆதாரமாகக்கொண்ட ஒழுக்க மெய்யியலின் எழுச்சி முஸ்லிம் மெய்யியலிலும் வலுப்பெறலாயிற்று. அல் ஹிந்தி, அல் பராபி, இப்னு சீனா, இப்னு ருஷ்ட், இமாம் கஸ்ஸாலி, இப்னு மிஸ்கவாஹ் போன்ற முஸ்லிம் மெய்யியலாளர்களின் ஒழுக்கவியல் சிந்தனைகள் முஸ்லிம் மெய்யியலில் செல்வாக்குப் பெற்றவையாகும். முஸ்லிம் பகுத்தறிவுச் சிந்தனையாளர்களின் கருத்தில் இறைவனுடைய சாரம், அவனுடைய கட்டளைகளின் மீளாத்தன்மை, அவனுடைய தார்மீகப் பொறுப்புக்களின் சுதந்திரம், அதன் முன் நிபந்தனைகள் என்பன பற்றிய உள்ளடக்கம் அமைந்துள்ளது. இவர்களது இறையியல் ஒழுக்கமானது கிரேக்க மெய்யியலின் செல்வாக்கிற்கு உட்பட்டுக் காணப்பட்டது. நீதி, அநீதி, நன்மை, தீமை, மகிழ்ச்சி, விழுமியம், அன்பு, ஞானம், ஆன்மீகம், இறை நாட்டம், இறை திருப்தி எனப் பல்வேறு தளங்களில் ஒழுக்க மெய்யியல் கருத்துக்கள் முஸ்லிம் மெய்யியல் சிந்தனையில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இத்தகைய ரீதியில் முஸ்லிம் மெய்யியல் சிந்தனையில் ஒழுக்கவியல் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைகின்றது. இது இரண்டாம் தரவுகளை அடிப்படையாகக்கொண்ட பண்புசார் ஆய்வாகும். இதற்கான தரவுகள் புத்தகங்கள், இணையத்தளக் குறிப்புக்கள், முன்னைய ஆய்வுகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டவையாகும். இதில் விளக்கமுறை, விமர்சனமுறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: முஸ்லிம் மெய்யியல், ஒழுக்கம், சாரம், நீதி, இறைவன

## அறிமுகம்

முஸ்லிம் மெய்யியலானது, பல கேள்விகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கூடாக வளர்ந்து வந்த துறையாகும். இது ‘கத்ர்’ எனும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட விடயங்கள், தக்லீப் (கடமைகள்) மற்றும் லௌகீக ஆட்சியாளர்களின் (குறிப்பாகக் கலிபாக்களைக் குறிப்பிடலாம்) அநீதி என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கப்பட்டது. எனவே இத்துறையானது மெய்யியல் சார்ந்த அல்லது இறையியல் சார்ந்த விடயங்களை ஆராய்கிறதா என்பது விவாதத்திற்குரியதாகும். மு.ஃ.தசிலா (Mutozila) கல்வி நிலையங்களில் தோன்றிய ஆரம்ப ஒழுக்கவியல் எழுத்தாளர்கள் கிரேக்க மெய்யியயலின்பால் கவரப்பட்டனர். ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு (கி.பி. 9ம் நூற்றாண்டு) காலப்பகுதியில் இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாடு (Stoicism), பிளேட்டோவின் கோட்பாடு மற்றும் அரிஸ்ரோட்டிலின் கிரேக்க ஒழுக்கவியல் சார்ந்த கோட்பாடுகளுடன் உறுதியாகக் கவரப்பட்டதன் விளைவாக ஒழுக்க மெய்யியலானது உண்மையை அறியும் திறனினூடாக புது வடிவம் பெறத்தொடங்கியது.

முதலாவது முஸ்லிம் மெய்யியலாளராக அல்-ஹிந்தி (Al-Kindi) காணப்படுகிறார். மெய்யியல் கற்ற முதல் இஸ்லாமிய அரேபியர் எனும் பெருமையும் இவரையே சாரும். அத்துடன் இவர் 'அரேபியர்களின் மெய்யியலாளர்' எனவும் அழைக்கப்படுகின்றார். இவருடைய நிலைத்து நிற்கக்கூடிய ஒழுக்கவியல் சார்ந்த எழுத்தாக்கங்கள் பொதுவாக பழம்பெரும் மெய்யியலாளர்களான சோக்கிரட்டிஸ், மற்றும் Diogenes the Cynic கொள்கை என்பவற்றினால் கவரப்பட்டு எழுதப்பட்டவையாகும். அதே போன்று அபூ-பக்ர்-அல்ராஸி (Abu Bakr al-Razi) என்பவரும் பிளேட்டோவின் கருத்தியல்களை தமது ஆக்கங்களில் உட்புகுத்தியுள்ளதைக் காணலாம். இதில் அவர் பிளேட்டோவினது ஆன்மாவின் பிரிவுகள் என்ற விடயத்தினை ஏற்றுக்கொள்கின்றார். பிளேட்டோவின் அகடமியில் கல்வி கற்று பிளேட்டோவின் கருத்துக்களால் ஆகர்ஷிக்கப்பட்ட ஒருவராக அல்- பராபி (Al-Farabi) விளங்குகிறார். அத்தோடு இவர் அரிஸ்ரோட்டிலின் கருத்துக்களையும் ஆதரிப்பவராகவே விளங்கினார். அந்தவகையில் இவர் தனது நூல்களில் தீமை பற்றிய விடயங்களை கலந்துரையாடியுள்ளார். இப்னு ஸீனா மற்றும் இப்னு ருஷ்ட் (Ibn Sina and Ibn Rushd) ஆன்மாவை அறிவினூடாக இணைந்ததான கோட்பாட்டினை அபிவிருத்தி செய்கிறனர். இதில் ஆன்மாவானது இறுதியில் அறிவினையும் கோட்பாட்டினையும் அடையப் பெறுவதினூடாக பூரணமடைய வேண்டும் என்பது அவர்களது எதிர்பார்ப்பாகும்.

ஹிஜ்ரி 12 (கி.பி 18ம் நூற்றாண்டு) மற்றும் அதற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இப்னு மிஸ்காவாஹ் (Ibn Miskawayh) மற்றும் அவரது சகாக்களினூடாக மீண்டும் பிளேட்டோவின் ஒழுக்கவியல் சார்ந்த பாரம்பரிய விடயங்கள் இக்காலப்பகுதியில் செழிப்படைந்தன.

முஸ்லிம் மெய்யியல் மீதான மிஸ்காவாஹ் இன் செல்வாக்கு முதன்மையாக நெறிமுறை ஒழுக்கவியல்களின் பரப்பளவில் உள்ளது. அவர் ஒழுக்கமுறைகளின் முதல் பிரதான இஸ்லாமியப் பணியின் ஆசிரியராக இருந்தார். இது ஒழுக்கவியல் மறுசீரமைப்பு என்ற தலைப்பில் எழுதப்பட்டது. இது நடைமுறை நெறிமுறைகள் மற்றும் நடத்தைகள் பற்றிய தன்மை ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தது. அவர் பொதுமக்களிடமிருந்து தனிப்பட்ட ஒழுக்க நெறிமுறைகளைப் பிரித்து, இயற்கை மற்றும் ஏமாற்றத்துடனான காரணத்தை விடுவிக்கும் தன்மைக்கு மாறுபட்டார். மேலும் மிஸ்காவாஹ், அவரது காலத்தின் அறிவார்ந்த மற்றும் கலாசார வாழ்வில் முக்கிய நபராக இருந்தார்.

பிளேட்டோ ஆன்மாவை மூன்று பிரிவுக்குள் உட்படுத்தி நோக்கியது போன்று இப்னு மிஸ்காவாஹ் நல்லொழுக்கத்தை மூன்று விதமாக வகைப்படுத்தினார். அவை அறிவு, ஊக்கம், சுயகட்டுப்பாடு போன்றனவாகும். இவருடைய இக்கருத்தினை இவருக்குப் பின்வந்த மெய்யியலாளர்களான அல்-தூசி மற்றும் அல்-தவ்வானி (Al-Tusi and Al-Dawwani) போன்றோர் விரிவாக ஆராய்ந்தனர். பிற்பட்ட எழுத்தாளர்களாக விளங்கிய அல்-கஸ்ஸாலி மற்றும் பக்ர் அல்-தீன் அல்-ராசி (al-Ghazali and Fakhr al-Din al-Razi) போன்றோர் மெய்யியல் மற்றும் சமய ஒழுக்கக் கருத்துக்களை உள்ளடக்கி தமது நூல்களை வகுத்தனர். இதனூடாக இவர்கள் ஒழுக்கவிதி மற்றும் ஆன்மீக பரிபூரணத்திற்கு செல்லும் பாதை மறைபொருளான தொனியைக் கொண்டிருக்கிறது என்பதனை எடுத்துக்காட்ட விளைகின்றனர்.

இக்கட்டுரையானது முஸ்லிம் மெய்யியலாளர்களால் முன்வைக்கப்பட்ட ஒழுக்கவியல் கருத்துக்களை பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது. இதன் மூலம் முஸ்லிம்களின் பகுத்தறிவு வாதத்தில் ஒழுக்க மெய்யியல் கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்துமாற்றை அறிய முடியும்.

**இறையியல் முன்னோடிகள்**

ஆரம்பகால ஒழுக்கவியல் ஆராய்ச்சிகள் 7ம், 8ம் நூற்றாண்டில் ‘கத்ர்’ பற்றிய கேள்வியை மையமாகக் கொண்டு கலந்துரையாடப்பட்டன. அது மனிதனுக்கு முன்னூகிக்கப்பட்ட எதிர்வுகூறல் அல்லது இறைவனால் முன்வைக்கப்பட்ட ‘முன்கணிப்பு’ ஆகும். ஆரம்பத்தில் டமஸ்கஸில் உருவான ‘கத்ர்’ பற்றிய கேள்வியானது உமைய்யா கலிபாவினுடைய தார்மீக பொறுப்பினுடைய சூழல் பற்றியதாகும். அது அவர்களினுடைய அடக்குமுறைக் கொள்கையை கொண்டிருப்பதுடன் தெய்வக் கட்டளையின் ஒரு பகுதியாகவும் காணப்பட்டது என அவர் நிரூபித்தார். அதனைத் தொடர்ந்து எது சரி, எது பிழை என்பது பற்றிய முறையான வரைவிலக்கணம் முதன்முறையாக முன்வைக்கப்பட்டது. பஸராவினுடைய மு∴தசிலா (Mutozila) என்பது ஒரு முஸ்லிம் மெய்யியல் பள்ளி ஆகும். இது கி.பி. 8 - 10 வரை பக்தாத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. மேலும் இது இஸ்லாமியக் கொள்கைகளைப் பகுத்தறிவு அடிப்படையில் ஆராய முற்பட்டது. பகுத்தறிவால் இறைவனை அறியலாம், எது நல்லது எது கெட்டது என்று கூறலாம் என்று மு∴தசிலாக்கள் கூறினார்கள். மேலும் இவர்கள் ஓரிறைக் கொள்கை, தன்விருப்புக் கொள்கை, நியாயமான கடவுள் போன்ற கொள்கைகளுக்கு பகுத்தறிவு சார்ந்த கருத்துக்களை முன்வைத்தார்கள். இது கடவுள் கொள்கையோடு சார்ந்து, மெய்யியலாளர்களின் பகுத்தறிவுக் கருத்துக்களையும் கொண்டிருந்தது. இதற்கு அக்காலப் பாரம்பரிய வாதிகளிடமிருந்தும் பழைமைவாதிகளிடமிருந்தும் அங்கீகாரம் கிடைக்கவில்லை. பழைமைவாதிகள் கடவுள் கட்டளையிட்டதெல்லாம் சரி என்றும் கடவுள் தடை செய்தவை அனைத்தும் பிழை என்றும் கருதினர்.

மு∴தசிலா பகுத்தறிவு வாதமானது கடவுளின் சாரம், அவனுடைய கட்டளைகளின் மீளாத்தன்மை, அவனுடைய தார்மீகப் பொறுப்புகளினுடைய சுதந்திரம், அதன் முன் நிபந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. மு∴தசிலாக்களின் இறையியல் ஒழுக்கமானது கிரேக்க மெய்யியலின் செல்வாக்கிற்கு உட்பட்டுக் காணப்பட்டது. இக்கிரேக்க மெய்யியலானது முன்னர் காணப்பட்ட வளங்களைக் கொண்டு தற்கால அறிவினால் முழுமையாகத் தீர்மானிக்க முடியாதது என்றும் இரண்டாம் நூற்றாண்டில் இந்தத் தீவிரவாத இறையியல் இயக்கம் தொடங்கப்பட்டு தீவிர நகர்வு ஆரம்பமாகியது என்பதும் இது வாசில் இபின் அதா (Wasil ibn Ata,700–748) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது என்பதும் மெய்யியல் சுவடுகளின் மொழிபெயர்ப்பில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது. எப்படியாயினும் கிறிஸ்தவ மெய்யியலாளர்களின் தொடர்பும் டமாஸ்கஸின் ஜான் மற்றும் அவருடைய சீடர் தியோடோர் அபுகுர்ரா (Theodore Abū Qurrah,750–823) போன்றவர்கள் காதரியா (Qadariyah) மெய்யியலாளார்களின் உருவாக்கத்துக்கு மு∴தசிலாவின் முன்னோடிகள் முக்கிய காரணிகளாக அமைந்தனர் எனலாம்.

**ஒழுக்க மெய்யியலின் எழுச்சி : சோக்கிரட்டீஸ் மற்றும் ஸ்டோயிக் (இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாடு)**

அல்-ஹிந்தி என்பவர் ஸ்டோயிக் பாரம்பரியம் (Stoic tradition), குறிப்பாக எபிக்டீட்டஸின் (Epictetus) சிந்தனையால் வலுவாக பாதிக்கப்பட்டிருந்தார். இஸ்லாத்தினுடைய முதலாவது மெய்யியலாளரான இவரே மெய்யியல் ஒழுக்கத்தைப் பற்றி முதன்முதலில் எழுதியவராவார். அக் காலகட்டத்தில் வேறுபல மு∴தசிலா மெய்யியலாளர்கள் குர்ஆனையும் ஹதீஸையும் வைத்துத் தமது கருத்துக்களை தெரிவித்தனர். ஆனால் அல்-ஹிந்தி கிரேக்க மெய்யியலை மையமாக வைத்தே தனது கருத்துக்களைத் தெரிவித்தார். இவரது கட்டுரைகள் சோக்கிரடீஸ் தத்துவங்களோடு எழுதப்பட்டதாக பல எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும், அல்-ஹிந்தி ‘நல்லொழுக்கம் பாதையை அமைத்து விட்டது’ (Paving the way to Virture) என்ற தொகுப்பையும் ‘சரணடைதல் என்ற கலை மீது’ (Fi al-

hila li-daf‘ al-ahzan) என்ற ஆக்கத்தையும் வழங்கினார். மேலும் அவருடைய சோக்கிரடீஸ் ஆக்கங்களுக்குச் சான்றாக பின்வரும் ஆக்கங்களைக் குறிப்பிடலாம். ‘சோக்ரடீஸின் சிறப்பு’ (Excellence of Socrates), ‘சோக்ரடீஸ் மற்றும் அசேகன்ஸ் இடையே ஒரு உரையாடல்’ (A Dialogue between Socrates and Aeschines), ‘சோக்ரட்டீஸினது கூற்றுகள்’ (Alfaz Sugrat) போன்றனவே எஞ்சியிருக்கிறது என பாரம்பரிய ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இறுதியாக சேகரிக்கப்பட்ட ஆக்கங்களான ‘சோக்ரடீஸின் பிரமுகர்கள்’ (Personalities of Socrates), ‘சைனிக் டயோஜெனெஸ்’ (Diogenes the Cynic) போன்றவை இவருடைய சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். ‘சரணடைதல் என்ற கலை மீது’ என்பதைப் பற்றி ஆராய்வோமானால் அதனுடைய முன்னைய பதிப்பான ‘ஸ்டோயிக் இலட்சியம்’ (பேராசையிலிருந்து விடுதலை - Stoic ideal of apatheia) என்பதிலிருந்து மாறுபட்டுக் காணப்படுவதுடன் பல சிறப்பான ஆக்கங்களையும் கொண்டு காணப்படுகின்றது. ‘துயரத்தின் மயக்கம்’ (The antidote of sorrow) என்ற ஆக்கத்தில் அல்-ஹிந்தி ஞானம் எனப்படுவது குறுகியகால மனித வாழ்க்கையில் மனித நேயத்திற்கு எதிரானதோ அல்லது தீய செயற்பாடுகள் சார்ந்ததோ அல்ல. இதனை அல் - ஹிந்தி விளக்குகையில் தனி ஒரு நபர் சிந்தித்து செயற்பட்டு நடப்பதன் மூலம் துன்பத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால், தன்னையறியாமல் நடக்கும் விடயங்களிலிருந்து தவிர்ந்து நடப்பது கஷ்டமானது. எனவே, மற்றவர்களினால் ஏற்படுத்தப்படும் தவறுகளில் இருந்து தவிர்ந்து நடக்க முடியாது. அதனை ஏற்று நடப்பதே மனித நேயம் என்கிறார்.

சோக்ரட்டீஸ், பிளேட்டோ போன்றோருடன் ஆரம்பகால முஸ்லிம் மெய்யியலாளர்கள் தொடர்புடையவர்களாகக் காணப்பட்டனர். அபுபக்ர் அல் - றிஸ்வியின் (Abu Bakr Al Rizvi) ஆக்கங்களான ‘ஆன்மாவை குணப்படுத்துதல்’ (Al-Tibb Al-Ruhani), ‘வாழ்க்கைத் தத்துவம்’ (al-Sira al-falsafiyya) என்பவற்றில் பிளேட்டோவின் ஆசிரியரான சோக்ரட்டீஸை தெய்வீகமுடையவராகக் கருதுகிறார். இவர் பிளோட்டோனியக் (Platonic) கோட்பாட்டை பலவாறு நோக்கினார். அவற்றுள் தெய்வீகமான உயிரினங்கள், தாவரங்கள் என்பனவும் அடங்கும். அலெக்ஸாண்டிரியன் மருத்துவரான மெய்யியலாளர் கேலன் (Galen, 129 AD – c. 200) இனாலும் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அல் - றிஸ்வி பிளேட்டோவின் முக்கிய கருத்துக்களை ஆராய்ந்து பல தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.

சோக்ரட்டீஸையும், பிளேட்டோவையும் பின்பற்றி வந்த றிஸ்வி அடிமைத்தனத்திற்கு எதிராக எழுதியுள்ளார். மனித வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது. மெய்யியலாளர்கள் துன்பத்தை மட்டும் எழுதாமல் இன்பத்தை பெறும் வழிகள் பற்றியும் அதிகமாக எழுத வேண்டும் என்கிறார். மெய்யியலாளர்களின் தலையாய கடமை கஷ்டங்களைத் தடுப்பதும், முடியாவிடில் நன்மையின்பால் மீள்வதுமாகும் என்கிறார். மேலும் உண்மையில் கடவுள் பக்தியுள்ள மனிதன் நாகரீகத்தை விட மதத்தின்பால் செல்வான் எனவும் றிஸ்வி குறிப்பிடுகிறார்.

மேலும், அல் றிஸ்வியின் வாதத்தில், மனிதனது இறப்பிற்கு பின்பான வாழ்க்கையில் உலக வாழ்க்கையைவிட சிறப்பான உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் கொண்டு காணப்படுவான் எனவும் அவனுக்கு இறப்பிற்குப்பின் இன்பமும் துன்பமும் சேர்ந்து காணப்படும் எனவும் குறிப்பிட்டார். இறுதியாக இறப்பு என்பது பிறப்பை விட மேலானது எனக் குறிப்பிடுகிறார்.

**மு.ஃ.தஸிலாக்களின் ஒழுக்க மெய்யியல் : அல் பாராபி, இப்னு ஸீனா, இப்னு ருஷ்ட்**

அல் பராபி கி.பி. 872 இல் வாழ்ந்தவர். இவர் ஒரு மொழி பெயர்ப்பாளராகவும் கிரேக்க மெய்யியலுக்கு வியாக்கியானம் செய்பவராகவும் இருந்தார். அல்பராபியின் இறையியல், மெய்யியல் சிந்தனைகள் பக்தாத், துருக்கி நகரங்களின் கல்விக் கலாசாரத்தோடு தொடர்புபட்டிருந்தது. அலெக்ஸாண்டியா மெய்யியல் பள்ளியில் சேர்ந்து கிரேக்க விஞ்ஞானத்தையும் மெய்யியலையும் ஆய்வுக்குட்படுத்தி அதில் தேர்ந்தார். இதன் பேறாக முதல் ஆசிரியர் என அழைக்கப்பட்ட அரிஸ்டோட்டிலின் பிற்பாடு இரண்டாம் ஆசிரியர் என்ற பெயரை அல்பராபி தனதாக்கிக்கொண்டார். அல்பராபியிடம் இயற்கையையும் சமூகத்தையும் புரிந்துகொள்ள ஒரு பெரும் ஆர்வம் இருந்தது. இதற்காக பண்டைய கிரேக்க ஆய்வுகளை உன்னிப்பாக ஆய்வு செய்ய முற்பட்டார். குறிப்பாக பிளேட்டோ, அரிஸ்டோட்டில், நவ பைத்தகரியம், புளோட்டினஸ், நவ பிளேட்டோனியம் போன்றவற்றின் மெய்யியல் கூறுகளை அவர் தனது இஸ்லாமிய - அரபு நாகரீகங்களோடு ஒருங்கிணைத்தார். குர்ஆன் மற்றும் அதனது பல அறிவியல் துறைகள் பற்றி அல்பராபி அறிந்திருந்தது இந்த ஒருங்கிணைப்பைச் செய்வதற்கு அடிப்படை மூலமாகியது எனலாம் (ஏ.எல்.எம்.றியால், 2015).

இவர் மெய்யியலில் முறை சார்ந்த கருத்துக்களை முன் வைத்தவர்களுள் முதன்மையானவர் ஆவார். ஒழுக்கவியல் சம்மந்தமான கலந்துரையாடல்களுக்கு அவர் பெரும் பங்காற்றியுள்ளார். இவர் அரிஸ்டோட்டிலின் 'நிகாமைச்சேன் எதிக்ஸ்' (Nicomachean Ethics) பற்றிய ஒரு வர்ணனையினை எழுதியுள்ளதாக பாரம்பரிய ஆதாரங்களில் கூறப்பட்டுள்ளது. இவ் ஆக்கம் இஷாக் இபின் கூனையின் (Ishaq ibn Hunayn 830 – c. 910-1) என்பவரால் அரபு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. ஒழுக்கவியல் பற்றி அவர் குறிப்பிடுகையில் அதில் ஒரு பகுதியை இலக்கியம் சம்மந்தமான விமர்சனத்திற்கு ஒதுக்கியிருக்க வேண்டும் என அறிக்கை விடுக்கின்றார்.

ஆன்மாவில் ஆசைகளுக்கான பகுதி தன்னடக்கம், தைரியம், தனிமனித சுதந்திரம், நீதி போன்றவற்றை உள்ளடக்கியதெனவும் அதே நேரம் அறிவு ரீதியான பகுதியானது காரணம் அறிந்து செயற்படும் தன்மை, சரியாகத் தீர்ப்பளித்தல், அறிவு நுட்பம், சிறந்த புரிந்துணர்வு போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது எனவும் குறிப்பிடுகின்றார்.

அல்பராபி அரிஸ்ரோட்டிலின் கருத்துக்களைப் பின்பற்றியவர். ''ஒரு நகரத்தில் அல்லது ஒரு பிரதேசத்தில் பொதுவான பொருட்கள் சமமாக பகிர்ந்தளிக்கப்படுவதே 'நீதி' என்ற அரிஸ்ரோட்டினால் முன்வைக்கப்பட்டுள்ள நீதி சம்மந்தமான கருத்துடன் இவரும் உடன்படுகின்றார். பொதுவான பொருட்கள் என்று இவர் இங்கு குறிப்பிடுவதாவது பாதுகாப்பு, செல்வம், கௌரவம், பொது அலுவல்கள் என்பனவாகும். சமூகத்தில் இன்னொரு நபருக்கு பகிரப்பட வேண்டிய விடயங்களே சமமாகப் பகிரப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். பொதுவாக நீதியைப் பற்றி குறிப்பிடும் போது ஒரு மனிதன் தன்னுடன் அதே நேரம் அவனது உறவினர்கள் மற்றும் மற்றவர்களுடன் நீதியாக நடந்து கொள்வதே இதன் விளக்கமாகும்.

மேலும் அல்பராபி தனது ஒழுக்கவியல் கருத்துக்களில் ஓர் அம்சமாக தீங்குகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அரிஸ்ரோட்டில் இது பற்றிய கருத்துக்களை முன்வைக்காத நிலையில் இவர் அது பற்றி ஆழமாகப் பேசுகின்றார். அவர் இந்த உலகத்தில் எவ்வித தீய சக்தியும் இல்லை என்பதை நவபிளேட்டோனியவாதப் பாணியில் விளக்குகிறார். தீங்கு என்ற விடயம் இவ்வுலகில் இல்லை. உலகில் இருக்கும் அனைத்து விடயங்களும் நல்ல விடயங்களே என இவர் வலியுறுத்துகின்றார். மனிதனின் அறிவினால் தீங்கு என்ற ஒன்று நடைபெறுவதில்லை எனவும் குறிப்பிடுகின்றார். எங்கு நீதி நிலைநாட்டப்படுகிறதோ அங்கு இருப்பது சிறந்தது. இருப்பினும், நல்லவற்றை ஏற்று தீமையான விடயங்களைத் தவிர்ந்திருப்பதே சிறந்தது என்கின்ற பாரம்பரிய நவபிளாட்டோனியவாதிகளின்

கருத்துக்களை இவர் ஏற்கவில்லை. இது தடுப்பு அரண் (dike) என்ற ஹெரக்ளிட்டஸின் (Heraclitus) கருத்தை பிரதிபலிப்பதாகத் தோன்றுகிறது.

அல் பராபி இன் சீடர்களில் ஒருவரே இப்னு ஸீனா ஆவார். மருத்துவம், மெய்யியல் மற்றும் விஞ்ஞானம் போன்றவற்றில் இப்னு ஸீனாவின் பங்களிப்பானது இன்றைய நவீன அறிவியல் சிந்தனைக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. அலி இப்னு ஸீனா (அவிசென்னா- Avicenna) (Ibn Sina 980 -1037) இஸ்லாமியப் பொற்காலத்தை சேர்ந்தவராவார். 'அல் காணூன் பித்திப்' என்ற மருத்துவக் கலைக் களஞ்சியம் இவரது அறிவியல் சிந்தனைகளின் முதன்மை அங்கீகாரமுடையது எனலாம் (றியால், 2015). உளவியல் சம்மந்தமாக இவர் முன்வைத்துள்ள கருத்துக்கள் பிளேட்டோவின் சிந்தனைகளுடன் மிக நெருக்கமானதாக காணப்படுகின்றது. இப்னு ஸீனா ஆன்மாவை மூன்று வகையாக வேறுபடுத்துகின்றார்.

- பகுத்தறிவுக்குரியது
- கோபம் சம்பந்தமான உணர்ச்சிகளுக்குரியது
- ஆசைகளுக்குரியது

இம்மூன்று பகுதிகளையும் அறிவு, தைரியம், தன்னடக்கம் போன்ற நற்குணங்கள் ஆளுகின்ற அதேவேளை இவை ஒன்று சேரும் போதே நீதி பிறக்கின்றது எனக் குறிப்பிடுகின்றார். அரசியல் நீதித்துறை அமுலாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, இப்னு ஸீனா வாதிடுகிறார். இவர் உலகின் இறையாண்மை மற்றும் பூமியில் கடவுளின் துணை போன்றன கலீ∴பாவின் இருப்புக்கு அவசியம் எனக் குறிப்பிடுகிறார்.

உளவியல் கருத்துக்களை வெளியிடுவதில் அல் பராபியை விட இப்னு ஸீனாவே முன்னணியில் உள்ளார். உலகுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பான அறிவு மற்றும் ஆன்மா என்ற இரண்டுக்கும் இடையிலான தொடர்பு பற்றிய ஒற்றுமைக் கோட்பாடு ஒன்றை இவர் முன்வைத்துள்ளார். உயர்ந்த அறிவைப் பெறுவதற்கு ஆன்மா பூரணத்துவமாக இருக்க வேண்டும். அறிவு பூரணத்துவமாக இருந்தால் முழு உலகமும் அறிவுமயமாக விளங்கும். இந்த இணைப்பில், மிக உயர்ந்த அளவிலான ஞானத்தையும், நல்லொழுக்கத்தையும் அடைந்த ஆத்மாவின் இறுதிக் கட்டத்தை இணைக்கலாம் என அவர் வாதிடுகிறார். இதன்மூலம் உலகில் அதிகமான புரிந்துணர்வு பிரதிபலிக்கப்படும். மேலும் ஒருவனது ஆன்மா அவனது உடலுடன் இருக்கும் வரைக்கும் அவனது இறுதி மகிழ்ச்சி இருக்கும் என இவர் குறிப்பிடுகின்றார்.

'அவ்ரோசு' என்று மேற்கில் அறியப்படும் இப்னு ருஷ்ட் (Ibn Rushd,1126 - 1198) ஒரு பல்துறை இஸ்லாமிய அறிஞர். மருத்துவம், அறிவியல், மெய்யியல், சட்டம், மொழியியல் எனப்பல துறைகளில் இவர் தேர்ச்சி பெற்றவர். இஸ்லாமிய மெய்யியலில் பகுத்தறிவு வாத சார்பாளார்களில் முதன்மையானவர். இமாம் கஸ்ஸாலியின் 'மெய்யியலாளர்களின் பொருத்தப்பாடின்மை' (Incoherence of the Philosophers) என்பதற்கு எதிராக 'The Incoherence of the Incoherence' என்ற மறுப்பு நூலை எழுதினார். எனினும் இஸ்லாமிய சமூகத்தை அல்-கஸ்ஸாலியின் மெய்யியல் தாக்கத்தில் இருந்து அவரால் திசை திருப்ப முடியவில்லை. அரிஸ்ரோட்டிலின் வழியில் வந்த இவர் அரிஸ்டோட்டிலின் மெய்யியலோடு கிறிஸ்த்தவ நம்பிக்கைகளை இணக்கமான முறையில் இணைத்த மெய்யியலையும் பேசினார். இவர் பல நூல்களை மூலாதாரமாகக் கொண்டு Nicomachean Ethics சம்மந்தமாக ஓர் பொழிப்புரையையும், நடுநிலையான ஒரு விமர்சனத்தையும் எழுதியுள்ளார். இவர் எழுதியவை இன்று ஹிப்ரு, லத்தீன் மொழிகளில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவரது ஒழுக்கக் கோட்பாடானது

பிளேட்டோவின் குடியரசு நூலின் பொழிப்புரையுடன் தொடர்புபட்டதாக விளங்குகின்றது. இப்னு ருஷ்ட் இன் கருத்துப்படி ஆன்மாவின் மூன்று பாகங்களில் முக்கியமாக நல்லொழுக்கங்கள் முழுமையாக ஒத்திருக்கும். அறிவு, தைரியம், தன்னடக்கம் ஆகிய மூன்று நல்லொழுக்கங்களின் இணக்கம்தான் 'நீதி' என இவர் விபரிக்கின்றார். இக்கருத்து பிளேட்டோவின் கருத்துடன் தொடர்புடையதாகும்.

ஆனால் அரிஸ்டோட்டிலின், 'நிக்கோமசான் ஒழுக்கவியலில்' குறிப்பிட்ட இரண்டு துணைப்பிரிவுகளை இப்னு ருஷ்ட் 'சரியான நல்லொழுக்கம்' எனக் குறிப்பிடுகிறார். எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக வாழ்க்கையில் மகிழ்ச்சி என்ற ஒன்றை அவர் இனங்காணவில்லை. அரிஸ்டோட்டில் செய்தது போன்றதென்றாலும் முஸ்லிம் நவபிளேட்டோனியவாதிகளால் மனிதனின் பிரதான இலக்கு என்று கருதப்படும் செயலுடன் அறிவுடனான தொடர்பிலேயே இவர் மகிழ்ச்சியை ஒன்றிணைந்தார்.

**ஒழுக்கவியலில் இப்னு மிஸ்கவாஹ் மற்றும் பாரசீக எழுத்தாளர்களின் பங்கு**

அஹ்மத் இப்னு முஹம்மது இப்னு மிஸ்கவாஹ் (Ahmad Ibn Muhammed Ibn Miskawayh) என்பவர் மிக முக்கியமான ஒரு இஸ்லாமிய ஒழுக்கவியல் நெறிமுறைகள் தொடர்பான சிந்தனையாளர் ஆவார். மேலும் இவர் பிளேட்டோனியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மிஸ்கவாஹ் தக்லீப் அல் அஃலாக்கிற்கு (Tahdhib al-akhlaq- ஒழுக்கத்தை பயிரிடுதல்) மிகவும் முக்கியத்துவம் அளித்தார். இவரது ஒழுக்கம் சார்ந்த எழுத்தாக்கங்களை பொறுத்தவரை அது பாரசீகப் பாரம்பரிய ஒழுக்கவியல் சார்ந்த விடயங்களை அடித்தளமாகக் கொண்டதாக அமைந்ததாகும். Nasir-i Khusraw, Nasir al-Din al-Tusi, Jalal al-Din al-Dawani, Hussain Kashifi, Mulla Ahmad Nuraqi போன்றவர்களது எழுத்துக்களின் பிரதிபலிப்பாகவே இவரின் கருத்துக்களும் அமைந்திருந்தன.

முஸ்லிம் மெய்யியலின் பொதுமைப்பாட்டு அம்சமான பிளேட்டோனியமே மிஸ்கவாஹ் உடைய ஒழுக்கவியலுக்கான உளவியல் ரீதியான அடிப்படையாகும். கேலன் (Galen) என்பவர் பிளேட்டோவின் ஆன்மா பற்றிய கருத்துக்களை மூன்றாக பிரித்துள்ளார்.

- ஞானம் : ஆன்மாவின் விவேகமுள்ள பகுதி சார்பானது.
- மனோதிடம் அல்லது பேருக்கம் : ஆன்மாவின் அழித்திட முடியாத இயல்பு சார்பானது.
- தன்னடக்கம் அல்லது மிதமான தன்மை : ஆன்மாவின் காமம்சார் பகுதியின் தன்னடக்கத்துடன் தொடர்பானது.

நீதியானது மிஸ்கவாஹ் விபரிப்பதற்கேற்ப ஆன்மாவின் பகுதிகள் இசைவடைந்து இணங்கிப் போகின்றபோதுதான் இம்மூன்றினதும் சரிவிகிதத்தன்மை உருவாகும். பரிசுத்தம் அல்லது நேர்மை என்பது பரிசுத்தத்தின் ஒரு பகுதியல்ல. மாறாக அங்கு கூறும் அப்பரிசுத்தமே என்று அரிஸ்டோட்டில் வாதிட்டார். முற்று முழுதான பரிசுத்தம் அல்லது தூய்மை பற்றி அரிஸ்டோட்டில் போரபிரி (Porphyry) மூலமாக விளக்கியதைப் போல இது மூன்று உட்பிரிவுகளால் ஆக்கப்பட்டது. அதாவது இறைவனுக்குரிய எங்களின் கடமைகள், எங்களுக்கு மேலுள்ளவர்கள் மற்றும் சமமானவர்களுக்குள்ள கடமைகள், எங்கள் முன்னோர்ளுக்குள்ள எங்கள் கடமைகள் என்பவையாக வகைப்படுத்தப்படுகின்றது.

எனினும் மிஸ்கவாஹ் அரிஸ்டோட்டிலிலிருந்து மாறுபட்டுப் பேசுகின்றார். மேலும் இதை இந்த உயர்வான பரிசுத்தத்தின் வழக்கங்களையும் பயிற்சிகளையும் இறைவனிடத்திலிருந்து உண்டான தூய சட்டமான ஷரிஆற்கு கையளித்தல் பற்றியும் எதிர்வு கூறுகிறார். மேலும் நீதியை களங்கப்படுத்துகின்ற

செயல்களை தடுப்பதற்கான செயற்பாடுகளை 'Just Iman or Caliph' என அழைக்கிறார். மிஸ்கவாஹ், அரிஸ்டோட்டிலினது கருத்துக்களைப்பற்றி அதிகமாக பேசினாலும் அவரது அரேபிய மொழிபெயர்ப்பின் மூலங்கள் எங்களை படைத்தவனான இறைவனை வணங்கி வழிபடுவதற்கான நிபந்தனைகளைத் தருகின்றது.

எப்படியாயினும் Illeupplalunic மூலகமான மிஸ்கவாஹ் இன் நெறிகளானது மகிழ்ச்சி பற்றிய பகுப்பாய்வை வழங்குகின்றன. அவர் கூறியது போல செய்முறை மற்றும் தத்துவ முறைகளான இரு உட்பிரிவுகளும் மனிதனை மிக உயர்வான நுண்ணறிவுடனும் உயிர்ப்பான அறிவுடனும் இணைக்கிறது. ஆயினும் மிஸ்கவாஹ் நுண்ணறிவு பூரணத்துவத்திற்கும் அப்பால் ஒரு தெய்வீகம் அல்லது அமானுஷ்ய நிலைகளை அடையாளம் கண்டு கொண்டார். அதுவே வார்த்தைகளை தாண்டிய மனிதன் பங்கு கொள்கின்ற தெய்வீக பூரணத்துவம் அல்லது சுய தெய்வமாதல் நிலையை அடைதல் ஆகும். இந்த தெய்வீகம் பற்றிய நிலைமைகளும் அரிஸ்டோட்டிலின் ஆன்மாவின் பரிசுத்தம் பற்றிய வகையீட்டிலிருந்தே தோன்றியிருக்கலாம் என கருதப்படுகிறது. இதனையே அரேபிய மொழிபெயர்ப்பிலும் மிஸ்கவாஹ் கூறினார். ஆனால் இது அரிஸ்டோட்டிலின் நான்கு ஒழுக்க ஆராய்ச்சி நூல்களின் தொகுப்பான 'De Virtutibus et Vitiis' இல் இருந்து தெளிவாக வேறுபடுகிறது.

மிஸ்கவாஹ் உடைய நன்கு அறியப்பட்ட இரண்டு பின்பற்றுனர்களான நசீர் அல் டின் அல் துசி (Nasir al-Din al-Tusi) 'Nasirean Ethics' இனை எழுதியவர் ஆவார். ஜலால் அல் டின் அல்-தாவானி (Jalal al-Din al-Dawani) 'Lawami Al Ishrag Fi Makarim Al-Aklag' எனும் நூலின் எழுத்தாளர் ஆவார். Tahdhib al aklaq விடயத்தில் Al-Tusi மற்றும் Al-Dawani இருவரும் மிஸ்கவாஹ்யின் வழியை மிகவும் நெருக்கமாக பின்பற்றியவர்கள் ஆவர். மிஸ்கவாஹ் இற்குப்பின்னர் வந்த எழுத்தாளர்களுக்கிடையிலான அடிப்படை வேறுபாடு யாதெனில் வீட்டு முகாமைத்துவம் பற்றிப் பேசியதும், தூய ஒழுக்க நெறிகளில் காணப்பட்ட அரசியலும் ஆகும். ஏனெனில் அவரின் நடைமுறை மெய்யியல் கருத்துக்களானது மரபின் எல்லையைத் தாண்டியது எனலாம். நடைமுறைவாத மெய்யியலின் நோக்கம் அரிஸ்டோட்டிலியப் பாணியில் பரவலாகக் கருதப்படலாம். இது மிஸ்கவாஹ்யின் ஒழுக்கவியல் உரையாடலை மட்டும் கட்டுப்படுத்த முனைந்தது.

நல்ல வாழ்க்கைக்கு ஒரு அத்தியவசிய முன்நிபந்தனையாக ஒழுங்குமுறை இணைப்பு உள்ளது என அல்-துசி வாதிடுகிறார். மன்னராட்சி, கொடுங்கோன்மை மற்றும் ஜனநாயக அரசாங்கம் என்ற மூன்று வடிவங்களையும் பற்றிப் பேசுகையில் இவர் அரிஸ்டோட்டிலின் கருத்துக்குச் சார்பாகப் பேசினார். இவர் முடியாட்சியை ஆதரிக்கிறார். இது 'நற்பண்புடையவர்கள்' அல்லது உயர்குடிகளின் ஆட்சி என பிளாட்டோவின் கருத்துக்களில் காணப்படுகிறது. எனினும், உண்மையான மன்னருக்கு தெய்வீக உத்வேகம் உதவுகிறது. ஆனால் இது இமாமுக்கு கீழ் உள்ளதாகும். சமூகத்தின் உண்மையான தலைமைத்துவம் இல்லாத நிலையில் நீதி, நிர்வாகம் போன்றவற்றை உறுதி செய்ய இடைக்காலத்திறன் கொண்ட ஒருவர் மன்னராக அதன்படி செயல்படுகிறார்.

அல்-தவாணியின் (Al-Dawani) ஒழுக்கவியல் நூலானது அடிப்படையில் அல்-துசியை முன்னின்று பின்பற்றியதாகும். ஆனால் உண்மையான ஷியா (Shi'ite) பாணியில் அவர் பூமியில் கடவுளின் ஆதரவாளராக (கலி∴பா) மனிதனது நிலைப்பாட்டைவிட அதிகமானதை வலியுறுத்துகிறார். "(நபியே!) இன்னும் உமதிரட்சகன் மலக்குகளிடம் 'நான் பூமியில் (என்னுடைய) பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக ஆக்கப் போகிறேன்', எனக்கூறிய சமயத்தில் அ(தற்க)வர்கள், '(இரட்சகா!) அதில் விஷமம் செய்து இரத்தம் சிந்தக் கூடியவரையா நீ ஆக்கப் போகிறாய்! நாங்களோ உன்னுடைய

புகழைக் கொண்டு உன்னைத் துதிக்கறோம் உன்னுடைய பரிசுத்தத்தன்மையை போற்றுகிறோம்' என்று கூறினார். (அதற்கு) 'நீங்கள் அறியாதவற்றை நிச்சயமாக நான் நன்கறிந்திருக்கிறேன்' என (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான் (என்பதை நினைவுகூறுவீராக!)" இதன் மூலம் அவர் வாதிடுவது யாதெனில் மக்கள் பிரதிநிதியானவர் வெளி மற்றும் உள் என்ற இரட்டை குணவியல்பு கொண்ட தெய்வீகத்தினை இயற்கையாகவும், ஆன்மீக ரீதியாகவும், வானதூதர்கள் மற்றும் படைப்புக்கள் யாவற்றையும் தாண்டிய இறைவனின் சாயலாகவும் மக்கள் பிரதிபலிப்பதாக வாதிடுகிறார். ஆள்பவரின் முதற்கடமை யாதெனில் தெய்வீக சட்டத்தின் (shari'a) படி இயற்றப்பட்ட சட்டங்களை பேணுவதும், நாட்டின் விவகாரங்கள் மற்றும் பொதுவான உலகலாவிய கொள்கைகளை நேரம், தேவைகள் என்பவற்றிற்கு அமைய பேணவேண்டும் என்பதாகும். ஆள்பவர் இறைவனின் நிழல் போலவும் இறைதூதர்களின் பிரதிக் குரலாகவும் செயற்படுவார்.

**மெய்யியல் மற்றும் சமய ஒழுக்கவியல்**

அல் ராகிப் அல்-இஸ்பஹானி (Al-Raghip Al- Isfahani), அபு ஹமித் அல்-கஸ்ஸாலி (Abu Hamid Al-Ghazali), பார் அல்-டினால் –ராஜி (Fahr Al-Dinal –Razi) போன்ற எழுத்தாளர்களைப் பற்றி எழுதுவதே மெய்யியல் மற்றும் சமய ஒழுக்கவியலின் பிரதான அம்சமாகக் காணப்படுகின்றது. அல்-கஸ்ஸாலி என்பவரே இந்தக் குழுவின் பிரதிநிதியாக காணப்பட்டார். இவர் அதிரடி நடவடிக்கை (Mizan Al-Amal) என்னும் நூலில் சமய மற்றும் ஒழுக்கவியல் கருத்துக்களை முன்வைத்தார். அதே போன்று 'மத அறிவியல் மறுமலர்ச்சி' (A-Ihyal' 'Ulum Al-Din) என்னும் நூலில் பிளாட்டோனிய உளவியல் சார்ந்த ஒழுக்கவியல் கோட்பாடுகளை இஸ்லாமிய மற்றும் மறைஞான உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் முன்வைத்தார். இக்கோட்பாட்டில் மதிநுட்பம், நீதி, மனோபலம் மற்றும் தன்னடக்கம் என்ற நான்கு கார்டினல் ஒழுக்கவியல்களின் அட்டவணை பிளாட்டோனிய ஒழுக்கங்களுடன் உடன்பட்டு காணப்படுகின்றது. அல்-கஸ்ஸாலியின் சமய மற்றும் மெய்யியல் கருத்துகளுக்கு உதாரணமாக மகிழ்ச்சியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்ற அவரது கருத்து முக்கியமானதாகும். மகிழ்ச்சியானது முக்கிய நன்மையாகும். சமய விழுமியங்கள் பற்றிய நான்கு உபபிரிவுகளில் இரண்டு துணைப் பிரிவுகளான உலகையும் மறுமையும் ஒப்புக் கொள்கிறார். மறுமையில் மகிழ்ச்சி தான் எங்கள் இறுதி இலக்கு, சில உலக பொருட்கள் இல்லாமல் அதனை அடைய முடியாது என்கிறார். மற்றைய இரண்டு உட்பிரிவுகளும் மகிழ்ச்சியான வாழ்வை எப்படி வாழ்வது என்பது பற்றியதகும். நாம் பிறருக்கு எதுவித நன்மையும் செய்யாமல் எமது வாழ்வில் மகிழ்ச்சியினைப் பெற முடியாது. நாம் பிறருக்குச் செய்யும் நற்பண்புகளாக சாந்தம், பொறுமை, அன்பு, நீதி, விழுமியம், பலம், நல்ல எண்ணம், தேக நலம், சமூக நோக்கு என்பனவற்றையும் உடல்நல நற்பண்புகளாக வலிமை, நல்ல அதிர்ஷ்டம் மற்றும் ஒரு நீண்ட வாழ்க்கை, செல்வம் என்பவற்றையும் வளமான வெளிப்புற நற்பண்புகளாக செல்வம், உறவினர், சமூகநிலை மற்றும் உன்னதமான பிறப்பு என்பவற்றையும் தெய்வீக நற்பண்புகளாக வழிகாட்டுதல், நல்ல அறிவுரை மற்றும் தெய்வீக ஆதரவு என்பவற்றையும் குறிப்பிடலாம். இக் கருத்துக்கள் அல்-குர்ஆன் மற்றும் ஹதீஸிலும் கூறப்பட்டுள்ளது. இறுதியானதும் தகுதியானதுமான 'தெய்வீக ஆதரவினை, புனித ஆன்மாவில் அடையாளம் காணலாம் என அல் கஸ்ஸாலி கூறுகிறார்.

ஒழுக்க மற்றும் ஆன்மீக பரிபூரணத்திற்கான பாதை 'இறைவனை நாடிச்செல்லுதல்' என விவரித்தார். இறைவனை நாடிச்செல்லுதலில் இறைவன், இரண்டு நிலைமைகளை திருப்திப்படுத்த வேண்டும். அதாவது, அவர்களின் நடவடிக்கைகள் 'தெய்வீகச் சட்டம்' அல்-ஷர் (al-shar) இன் பரிந்துரைகள் அல்லது விதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டும். இரண்டாவது, இறைவனை நாடிச் செல்பவர்கள்

இறைவன் எப்போதுமே தமது இதயத்தில் நிலையாக உள்ளான் என்பதனை முதலில் நம்புதல் வேண்டும். இவ்வாறு நாம் நம்புவதன் மூலமே ஏனைய பக்தர்களைப் போன்று நாமும் இறைவனிடமிருந்து அன்பு, கருணை, அழகு, சாந்தம் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என அல்-கஸ்ஸாலி கருதுகின்றார். உண்மையான புரிதல், அர்ப்பணிப்பு மற்றும் சமர்ப்பிப்பு மூலம் இருக்க வேண்டும் என்பது அல் கஸ்ஸாலியின் கருத்தாகும். அல் கஸ்ஸாலி மற்ற முஸ்லிம் மறைஞானிகளைப் போன்றோ அல்லது சூ.ஃபிகள் போன்றோ கடவுளின் அழகு மற்றும் மகத்துவத்தைப் பற்றிய தேடும் விழிப்புணர்விற்காக பிறந்தவர், இதனை அவர் மனித உணர்வு அல்லது காதல் எனக் கருதுகின்றார். இக் கருத்து முஸ்லிம் மெய்யியலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முடிவுரை**

முஸ்லிம் மெய்யியலானது பகுத்தறிவிற்கான தளத்தை முன்னோக்கியதிலிருந்து ஆரம்பமாகியது. முதல் மெய்யியலாளரான அல் - ஹிந்தி முதல் பிற்பட்டகால முஸ்லிம் மெய்யியல் சிந்தனையாளர்கள் வரை இறை திருப்தியை நாடிய வகையிலான கருத்துக்கள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவை மனித வாழ்க்கைக்கு அர்த்தம் தரும் முயற்சிகளாக மேற்கொள்ளப்பட்டவையாக அமைந்திருந்ததாகும். நாம் பிறருக்கு எதுவித நன்மையும் செய்யாமல் எமது வாழ்வில் மகிழ்ச்சியினைப் பெற முடியாது. நாம் பிறருக்குச் செய்யும் நற்பண்புகளாக சாந்தம், பொறுமை, அன்பு, நீதி, விழுமியம், பலம், நல்ல எண்ணம், தேக நலம், சமூக நோக்கு என்பனவற்றையும் உடல்நல நற்பண்புகளாக வலிமை, நல்ல அதிர்ஷ்டம் மற்றும் ஒரு நீண்ட வாழ்க்கை, செல்வம் என்பவற்றையும் வளமான வெளிப்புற நற்பண்புகளாக செல்வம், உறவினர், சமூகநிலை மற்றும் உன்னதமான பிறப்பு என்பவற்றையும் தெய்வீக நற்பண்புகளாக வழிகாட்டுதல், நல்ல அறிவுரை மற்றும் தெய்வீக ஆதரவு என்பவற்றையும் குறிப்பிடலாம். இக் கருத்துக்கள் அல்-குர்ஆன் மற்றும் ஹதீஸிலும் கூறப்பட்டுள்ளது. இதனை வலியுறுத்தும் வகையில் அமைந்த முஸ்லிம் மெய்யியலாளர்களின் ஒழுக்கவியல் கருத்துக்களை ஆராய்ந்து நோக்குவதனூடாக பகுத்தறிவின் அடிப்படையிலான நிறுவல்களாக இதனை புரிந்து கொள்ள முடியும்.

## References


1. Alon, I. (1991) *Socrates in Mediaeval Arabic Literature*, Leiden: Brill; Jerusalem: Magnes Press, The Hebrew University. (A reliable review of Socratic literature in Arabic.)
2. Arkoun, M. (1970) *Contribution à l'étude de l'humanisme arabe au IV/X$^{e}$ siècle (Contribution to the Study of Arab Humanism in the 4th-10th Centuries),* Paris: Vrin. (A detailed account of Ibn Miskawayh's ethics and his philosophical impact.)
3. Donaldson, D.M. (1953) *Studies in Muslim Ethics*, London: SPCK. (Contains useful information on Arabic and Persian ethics, but is now somewhat out of date.)
4. Fakhry, M. (1994) *Ethical Theories in Islam*, Leiden: Brill, 2nd enlarged edn. (A systematic analysis of philosophical and religious ethical theories in Islam.)
5. Hourani, G. (1985) *Reason and Tradition in Islamic Ethics*, Cambridge: Cambridge University Press. (An important collection of ethical studies by an eminent writer on ethical questions in Islam.)

6. Khadduri, M. (1984) *The Islamic Conception of Justice*, Baltimore, MD: Johns Hopkins University Press. (A discursive and informative account of this central ethical concept in Islamic thought.)
7. Leaman, O. (1995) *'Christian Ethics in the Light of Muslim Ethics'*, in C. Rodd (ed.) *New Occasions Teach New Duties?*, Edinburgh: T. & T. Clark, 219-31. (Comparative study of the differing roles played by ethics in Islam and Christianity.)